
# மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# கணினி பயன்பாடுகள்

## ASSIGNMENT – 1

## பல்லூடகம்




**ஜெ. கவிதா** B.Sc, B.Ed, M.C.A, M.Phil.,

**கணினி பயிற்றுநர் நிலை - I**

அரசு மேல்நிலைப்பள்ளி, சர்க்கார்சாமக்குளம்,

கோயம்புத்தூர் - 641107.

# பல்லூடகம்

## பல்லூடகம் மற்றும் அதன் சிறப்பம்சம்.

- பல்லூடகம் என்பது பல மற்றும் ஊடகம் என்னும் இரண்டு சொற்களை உள்ளடக்கியது. அதாவது பல்லூடகம் என்பது உரை, நிழற்படம், அசைவுப்படம், ஒலி, ஒளி காட்சிகள் அடங்கிய கணிப்பொறி தழுவிய ஒரு வழங்கு முறையாகும்.

  **சிறப்பம்சங்கள்:**
  - பயனர்களுக்கு தகவல் வழங்கும் அடிப்படையில் பல்லூடக பயன்பாடுகள் முக்கிய பங்கு வகிக்கிறது.

## பல்லூடக கூறுகள்:

பல்லூடகம் உரை, நிழற்படம், அசைவுப்படம், ஒலி, ஒளி காட்சிகள் ஆகிய ஐந்து முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது.

- **உரை** – பல்லூடகத்தின் அடிப்படைக் கூறாக செயல்படுகிறது.

  **2 வகை – 1) நிலையான உரை, 2) மீஉரை.**
- **நிழற்படங்கள்** – பல்லூடகத்தில் முக்கிய கூறாக செயல்படுகிறது.

  **2 வகை – 1) ராஸ்டர் படம், 2) வெக்டர் படம்.**
- **அசைவூட்டல்** – அசையா படங்களை மிக விரைவாக காண்பிப்பதன் மூலம் அவற்றை தொடர்ச்சியான அசைவு போன்ற உணர்வை கொடுக்கும் செயலே அசைவூட்டல் எனப்படும்.

  **2 வகை – 1) பாதை அசைவூட்டல், 2) சட்டக அசைவூட்டல்**
- **ஒலி** – எந்த ஒரு மொழியிலும் உள்ள அர்த்தமுள்ள பேச்சாகும்.

  **2 வகை 1) MIDI ஒலி, 2) இலக்க ஒலி**
- **ஒளி** – பதிவு செய்யப்பட்ட நிகழ்வு அல்லது காட்சி.

  **2 வகை 1) கலப்பு ஒளிக்காட்சி, 2) ஒப்புமை ஒளிக்காட்சி**

## பல்லூடகத்திற்கான கோப்பு வடிவங்கள்:

**உரை வடிவங்கள்:**
- RTF (Rich Text Format)
- Plain Text

**நிழற்படகோப்பு வடிவங்கள்:**
- TIFF (Tagged Image File Format) -
- BMP (Bitmap)
- DIB (Device Independent Bitmap)
- GIF (Graphics Interchange Format)
- JPEG (Joint Photographic Experts Group)
- TGA (Tagra)
- PNG (Portable Network Graphics)

**ஒலிக்கோப்பு வடிவங்கள்:**
- WAV (Waveform Audio File Format)
- MP3 (MPEG Layer-3 Format)
- OGG
- AIFF (Audio Interchange File Format)
- WMA (Windows Media Audio)
- RA (Real Audio Format

**ஒளிக்காட்சிக் கோப்பு வடிவங்கள்:**
- AVI (Audio/Video Interleave)
- MPEG (Moving Picture Experts Group)

## பல்லூடக உருவாக்கம்.

- பல்லூடக உருவாக்கம் என்பது தகவல்களை பார்வையாளர்களுக்கு எளிதாகச் சென்றடைய உதவும் ஒரு கருவி ஆகும்.
- பல்லூடகத்தை உருவாக்க போதுமான நேரம் மற்றும் திறமையான திட்டமிடல் தேவைப்படுகிறது.

## பல்லூடகத்தை உருவாக்கும் படிநிலைகள்

- கருத்துரு பகுப்பாய்வு மற்றும் திட்டமிடல்
- திட்ட வடிவமைப்பு
- முன் உருவாக்குதல்
- வரவு செலவு திட்டமிடல்
- பல்லூடக உருவாக்கும் குழு
- வன்பொருள் மென்பொருள் தேர்ந்தெடுத்தல்
- பொருளடக்கத்தை வரையறுத்தல்
- கட்டமைப்பை தயார்செய்தல்
- உருவாக்குதல்
- சோதித்தல்
- ஆவணப்படுத்துதல்
- பல்லூடக திட்டத்தை வழங்குதல்

## பல்லூடக உருவாக்கக் குழு உறுப்பினர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள்:

- **தயாரிப்பு மேலாளர்** – குறித்த நேரத்தில் முழு தரத்துடன் உருவாக்க திட்டத்தை வரையறுப்பவர்
- **பொருளடக்க வல்லுநர்** – ஏற்கனவே திட்டமிடப்பட்ட பயன்பாட்டின் பொருளடக்கத்தைப் பற்றி நன்கு அறிதல்.
- **ஸ்கிரிப்ட் எழுத்தாளர்** –கருத்துகளை முப்பாமாண சூழல்களில் காட்சிப்படுத்துகிறார்.
- **உரை பதிப்பாளர்** – சரியான இலக்கணத்தோடு உரையை எழுதுவார்.
- **பல்லூடக வடிவமைப்பாளர்** – உரை, ஒளி, இசை, ஒளிக்காட்சி புகைப்படம் போன்றவற்றை ஒருங்கிணைத்தல்.
- **கணினி வரைகலை கலைஞர்** – பின்னணி, புல்லட்கள், பொத்தான்கள், 3டி பொருள்கள் ஆகியவற்றை கையாளுகின்றார்.
- **ஒலி மற்றும் ஒளிக்காட்சி வல்லுநர்** – ஒளி விளைவுகளைப் பதிவு செய்தல் மற்றும் இலக்கமாக்கல் ஆகியவற்றை செய்கிறார்.
- **கணினி நிரலர்** – பொருத்தமான மொழியில் குறிமுறை அல்லது ஸ்கிரிப்ட் வரிகளை எழுதுகிறார்.
- **வலை வல்லுநர்** – ஒரு இணைய பக்கத்தை உருவாக்கி அதைப் பராமரிப்பது வலை வல்லுநரின் பொறுப்பாகும்.

**பொறுப்புகள்:**

- பல்லூடக உருவாக்கத்தில் அதிகபட்ச பலனை உயர்தர திறமையுடன் பெறும் வகையில் குழு உறுப்பினர்களை மேலாண்மை செய்வது கட்டாயமாகும்.
- இக்குழு வன்பொருள் மற்றும் மென்பொருளின் வரம்புகளை அறிந்து செயல்படவேண்டும்.

## பல்லூடக பயன்பாடுகள்:

**கல்வி (Education):**

- மின்வழி கற்றல்(e-learning) , தொலைதூரவழி கற்றல் (distance learning), மெய்நிகர் கற்றல் (Virtual learning) போன்ற கற்றல், கற்பித்தலில் பல்லூடகம் பயன்படுத்தப்படுகின்றது.

**பொழுதுபோக்கு (Entertainment):**

- வானொலி, தொலைக்காட்சி, ஆன்லைன் விளையாட்டு, தேவைப்படும் ஒளிக்காட்சி போன்ற அனைத்து வகையான பொழுதுபோக்கு அம்சங்களிலும் பல்லூடக தொழில்நுட்பமானது பயன்படுத்தப்படுகின்றது.

**வணிக அமைப் பு (Business Systems):**

- சந்தை படுத்துதல் மற்றும் விளம்பர நிறுவனங்கள் அசைவூட்ட தொழில்நுட்பத்தை வியாபார முன்னேற்றத்திற்காக பயன்படுத்துகின்றனர்.

**மருத்துவ சேவைகள் (Medical Services):**

- மருத்துவ மாணவர்கள் உண்மையாக அறுவை சிகிச்சை செய்வதற்கு முன் உருவாக்கப்படுத்துல் (Simulation) மூலம் அறுவை சிகிச்சை முறைகளை பற்றி பயிற்சி செய்கின்றனர்.

**பொது இடங்கள் (Public Places):**

- தொழில் கண்காட்சி, நூலகங்கள், இரயில் நிலையங்கள், அருங்காட்சியம், பெரிய கடைகள், விமானநிலையங்கள், உணவகங்கள் மற்றும் கண்காட்சி போன்ற பொது இடங்களில் பல்லூடகமானது தானியங்கு சேவை வழங்கி( Kiosks) வடிவத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

**பல்லூடகக் கலந்துரையாடல் (Multimedia Conferencing):**

- பல்லூடகக் கலந்துரையாடல் அல்லது ஒளிக்காட்சி கலந்துரையாடலில் பங்கேற்கும் பயனர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்தாலும் ஒரே அறையில் அமர்ந்து ஆலோசிப்பதை போன்று நேருக்கு நேராக கலந்துரையாட முடியும்.

**நூலகங்களில் உள்ள பல்லூடக தொழில்நுட்ப பயன்பாடுகள்:**

- பல்லூடக தானியங்கு சேவை வழங்கி (Multimedia Kiosks)
- வலை ஒளிபரப்பு மற்றும் ஒளிக்காட்சி கலந்துரையாடல் (Webcasting and video conferencing)
- பயனரை ஒருமுகப்படுத்தும் திட்டம் (User Orientation Program)
- உள்ளமைவு பல்லூடக வளங்கள் உருவாக்கம் மற்றும் மின் பதிப்பகம் (In-house Production of Multimedia Resources and E-Publishing)
- இலக்க பல்லூடக நூலகங்கள் (Digital Multimedia Libraries)



# கண் போன்ற கல்வியை



## நீ பொன் போல பாதுகாத்தால் மண்ணுலகில் சான்றோனாய் வாழ்ந்து விண்ணைத் தொடலாம்…!




J. Kavitha B.Sc.,B.Ed.,M.C.A.,M.Phil.,

Computer Instructor Gr-1

GHSS, Sarkarsamakulam

Coimbatore - 641107.